1972 பிப்ரவரி 1]

மிகப்பெரிய ஊராட்சி ஒன்றியம்

* 223 வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அதிக எண்ணிக்கையுள்ள ஊராட்சி மன்றங்களடங்கிய ஊராட்சி ஒன்றியம் எது?

(இ) குறைந்த எண்ணிக்கையுள்ள ஊராட்சி மன்றங்களடங்கிய ஊராட்சி ஒன்றியம் எது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம். அதில் 74 ஊராட்சிகள் அடங்கியுள்ளன.

(இ) கோவை மாவட்டத்தில் உள்ள பேரூர் ஊராட்சி ஒன்றியம், மதுரை மாவட்டத்தில் உள்ள கம்பம் ஊராட்சி ஒன்றியம், நீலகிரி மாவட்டத்தில் உள்ள கூடலூர் ஊராட்சி ஒன்றியம் ஆகிய இம் மூன்று ஒன்றியங்கள் ஒவ்வொன்றிலும் ஒன்பது ஊராட்சிகள் அடங்கியுள்ளன.

. வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றியம்.

* 224 வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) T வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள நீரேத்தான், தாதம்பட்டி, போடிநாயக்கன்பட்டி, குலசேகரன் கோட்டை ஆகிய ஊராட்சி மன்றங்கள் ஒரே ஊராக T . வாடிப்பட்டியில் உள்ளனவா?

(இ) ஆம் எனில், இந்நான்கு ஊராட்சி மன்றங்களையும் ஒன்றாகச் சேர்த்து T வாடிப்பட்டி எனும் பேரூராட்சி மன்றத்தை ஏற்படுத்த திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) T ாடிப்பட்டிக்கு ஓர் பேரூராட்சி அமைப்பதற்கான குறிப்புரை பரிசீலனையில் உள்ளது.

அரிசன ஆணையர்கள்

* 225 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்களின் ஆணையர்களாக தாழ்த்தப்பட்டவர்கள் தற்போது எத்தனை பேர் பணியாற்றுகிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 22 பேர்கள்.